iWSH | 011920

# iWSH



Information for Workers on Safety and Health



WSH COUNCIL
Tripartite Alliance for Workplace Safety and Health



# கோவிட்-19 நோயின்போது பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை மேலாண்மை செய்தல்

பணியிடப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் (Workplace Safety and Health - WSH) என்று வரும்போது, ஓட்டல் தொழிற்துறை கண்டிப்பான வழிகாட்டுநெறிகளைப் பின்பற்றுகிறது – குறிப்பாக ஓட்டல்களை கோவிட்-19 கடுமையாகத் தாக்கியுள்ள இந்தக் காலகட்டத்தில்.

காப்தோர்ன் கிங்ஸ் ஓட்டலில் துணை பாதுகாப்பு மேலாளராக உள்ள திரு. தமிழரசன் செல்லக்கண்ணு, ஓட்டலுக்குள் நேர்மறையான WSH நடைமுறைகளை அமலாக்குவதில் எப்படிப் பங்காற்றுகிறார் என்று பகிர்கிறார் – இந்தக் கவலை மிகுந்த காலகட்டத்தில் அவர் ஊழியர்களையும் விருந்தாளிகளையும் பாதுகாப்பாக (அதோடு மனநலத்துடன்) வைத்திருக்கிறார்.

### ஒரு பெருந்தொற்றின்போது WSH-ஐக் கையாளுதல்

பணியாளர்கள், விருந்தாளிகள் ஆகியோரின் சுகாதாரத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த, திரு. செல்லக்கண்ணு தமது செல்பேசிக்கு அனுப்பப்படும் சேஃப்என்ட்ரி (SafeEntry) தகவல்களின் மூலம் ஓட்டல் முழுவதும் ஊழியர்களின் நடமாட்டத்தைத் தடமறிகிறார். ஓய்வறைகளில் ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைவாக வைத்திருத்தல், பணியாளர்கள் பிற குழுக்களின் உறுப்பினர்களுடன் சேராமல் தடுத்தல் மற்றும் பல, பிற பாதுகாப்பு நடவடிக்கைகளில் அடங்கும்.

இந்தக் கூடுதல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் சிலருக்கு அளவுக்கதிகமாகத் தோன்றக்கூடும் என்றாலும், ஊழியர்கள், விருந்தாளிகள் ஆகியோரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் இவை தேவைப்படுகின்றன. திரு. செல்லக்கண்ணு ஓட்டல் ஊழியர்களுக்கு விளக்குவது போல, “உங்கள் அன்புக்குரியவர்களைப் பற்றிச் சிந்தியுங்கள். நீங்கள் தினமும் பாதுகாப்பாக வீடு திரும்ப வேண்டும் என்பதுதான் அவர்களுடைய விருப்பம். கூடுதலாகச் சில நிமிடங்கள் எடுத்துக்கொண்டு இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பின்பற்றுங்கள், அவர்களுக்காகப் பாதுகாப்பாக இருங்கள்.”

### தொழில்நுட்பத்தின் உதவியுடன் பாதுகாப்பாக இருத்தல்

ஊழியர்களையும் விருந்தாளிகளையும் பாதுகாப்பாக வைத்திருந்து அதே சமயத்தில் அவர்களை நல்ல மனநிலையிலும் வைத்திருக்க காப்தார்ன் கிங்ஸ் ஓட்டல் பல புதுமையான வழிகளை நடைமுறைப்படுத்தியுள்ளது. ஓட்டலின் மெய்நிகர் உடற்பயிற்சிகள் விருந்தாளிகளிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. குழுப் பயணங்கள் பணியாளர்களிடையே ஒரு சமூக உணர்வை வளர்த்திருக்கின்றன.

இதற்கிடையில், அறிவார்ந்த தொழில்நுட்பம் – சாவி மேலாண்மை அமைப்பு, வருகையாளர் மேலாண்மை அமைப்பு, வெற்றிடத் தூய்மைப்படுத்தி இயந்திரங்கள், காற்றுத் தூய்மைப்படுத்தி இயந்திரங்கள், கம்பள மெருகூட்டி இயந்திரங்கள் போன்றவை – சில தொடுபுள்ளிகளில் மனிதத் தொடர்பின் தேவையைக் குறைத்திருக்கிறது, அதன் மூலம் நோய்ப் பரவல் இடரைக் குறைத்துப் பணியிடப் பாதுகாப்பை மேம்படுத்தியுள்ளது.

### முன்பே உள்ள WSH நடைமுறைகளைப் பேணுதல்

பணியாளர்கள் புதிய நடவடிக்கைகளுக்கேற்ப மாறும் வேளையில், மாதாந்தர WSH பயிற்சி அமர்வுகளின் மூலம் முன்பே உள்ள WSH நடைமுறைகளையும் திரு. செல்லக்கண்ணு எல்லோருக்கும் நினைவூட்டுகிறார்.

மெத்தைகளை எடுத்துச் செல்லும்போது முதுகு பாதிப்புகளைத் தவிர்க்கச் சரியான உத்தியைப் பயன்படுத்துதல், யாரும் வழுக்காமலும் விழாமலும் இருக்கும் வகையில் தரைகளை உலர்ந்த நிலையிலும் எண்ணெய்ப் பிசுக்கு இல்லாதபடியும் வைத்திருத்தல், உணவு நஞ்சாதலைத் தவிர்க்க சமையலறையைச் சுத்தமாக வைத்திருத்தல், ஊழியர்கள் ஒரு ஏணியின் உச்சிப் படியில் நிற்காத வண்ணம் சரியான உயரத்தைக் கொண்ட ஒரு ஏணியைப் பயன்படுத்துதல், பராமரிப்பில் அல்லது பழுதுநீக்கத்தில் உள்ள எல்லாப் பகுதிகளுக்கும் முறையாகத் தடுப்பெல்லை வைத்தல் ஆகியவை இந்த WSH நடைமுறைகளில் அடங்கும்.

### பாதுகாப்பில் சமசரத்திற்கு இடமில்லை

பாதுகாப்பு என்று வரும்போது சமரசத்திற்கு இடமில்லை என்று திரு. செல்லக்கண்ணு உண்மையாக நம்புகிறார். அவர் தமது குழுவினரிடம் இவ்வாறு வலியுறுத்திச் சொல்கிறார்: “ஒரு பாதுகாப்பு இடரைச் சரிசெய்ய வேண்டியிருந்தால் அதைச் சரிசெய்துவிடுங்கள். ஒன்றை மாற்றீடு செய்ய வேண்டும் என்றால் அதை மாற்றீடு செய்துவிடுங்கள். 5 நிமிடம் செலவழிப்பதாக இருந்தாலும் சரி, அல்லது சிறிது பணம் செலவழிப்பதாக இருந்தாலும் சரி, ஒரு பாதுகாப்புப் பிரச்சினை குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றால் அதைச் செய்துவிட வேண்டும். உங்கள் செயல்கள் ஒரு உயிரைக் காப்பாற்றக்கூடும்.”

துரிதத் தகவல்:



**129 நிறுவனங்கள்**

WSH Council சபையின் மொத்த WSH திட்டத்தில் இணைந்துள்ளன, 5,024 பணியாளர்கள் பலன் பெற்றிருக்கிறார்கள்.

## இந்த இதழில்

பக்கம் 2
**மொத்த WSH திட்டம்** பற்றி மேலும் அறியுங்கள்



பக்கம் 3
**நேர்வு ஆய்வுகள்**
சொல் தேடல் புதிரில் பங்கேற்றுப் பரிசுகளை வெல்லும் வாய்ப்பைப் பெறுங்கள்.

பக்கம் 4
**எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்!**
பணியிடப் பாதுகாப்பும் சுகாதாரமும் உங்களுக்கு எவ்வளவு முக்கியமானவை என்பது குறித்து எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.


# பணியாளர்களுக்கான மொத்தப் பணியிடப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்

TOTAL WSH

## உங்கள் பணியிடத்தில் நல்வாழ்வைப் பெறுங்கள்



## மொத்த WSH எனக்கு ஏன் முக்கியமானது?




- பணியிடத்தில் நான் எனக்கும் மற்றவர்களுக்கும் தீங்கிழைக்கும் வாய்ப்பு குறைவு
- நான் என் வேலையை ஆக்கத் திறனுடன் செய்கிறேன், என்னால் தொடர்ந்து வேலைசெய்ய முடியும்
- நான் பாதுகாப்பாகவும் ஆரோக்கியமாகவும் வீடு திரும்பி என் குடும்பத்தினரைச் சென்றடைய முடியும்

## எனது நல்வாழ்வை மேம்படுத்த நான் என்ன செய்யலாம்?

### பணி

- எனது பணி எனது பாதுகாப்பையும் சுகாதாரத்தையும் பாதிக்கிறதா என்பது பற்றி என் மேற்பார்வையாளருடன் கலந்துரையாடுதல்
- எனது நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் திட்டங்களில் பங்கேற்றல்

### பாதுகாப்பு

- பணியைத் தொடங்குவதற்கு முன்பு சூழல்கள் பாதுகாப்பாக உள்ளனவா என்று சோதித்தல்
- எந்தப் பாதுகாப்பற்ற செயல்களையும், பாதுகாப்பற்ற சூழல்களையும் அல்லது தப்பித்த நிகழ்வுகளையும் தெரிவித்தல்
- எனது தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணம் எனது பணிக்குப் பொருத்தமானதா, சரியாக அணிகிறேனா, அது நல்ல நிலையில் இருக்கிறதா என்பவற்றைச் சோதித்தல்

### சுகாதாரம்

- எந்த மருத்துவ நிலைகளையும் முன்கூட்டிக் கண்டுபிடிப்பதற்குத் தொடர்ந்து சுகாதாரச் சோதனைகளுக்குச் செல்லுதல்
- நான் பாதுகாப்பாகவும் நன்றாகவும் வேலைசெய்யும் வகையில் எனது மருத்துவ நிலைகளை மேலாண்மை செய்தல்
- நான் நலமின்றி உணர்ந்தால் எனது மேற்பார்வையாளரிடம் சொல்லுதல்

# மொத்த WSH-இன் 3 முக்கியப் பகுதிகள் யாவை?

## 3 சொற்களைத் தேடி அவற்றை வட்டமிடுங்கள்.



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ம | இ | ற | டு | ஔ | வ | கை | ஞு |
| ங | வ | பா | அ | ம | ல | தெள | ந |
| சு | ஓ | ற | து | ள | க | ஞு | ன |
| கா | எ | ஒ | ப | கா | ள | ஊ | ல |
| தா | ஈ | ந | ள | ப | ப் | ஆ | க |
| ர | ப | ச | ன | ழ | ணி | பு | ம |
| ம் | ஏ | ய | ண | வ | சே | ஐ | த |
| ட | நூ | ஆ | ர | க | மை | த | சே |

## சரியாக விடையளித்து ஒரு பரிசை வெல்லும் வாய்ப்பைப் பெறுங்கள்!

**விடைகளை அனுப்புவதற்கான இறுதித் தேதி 30/06/2021.**

முழுப் பெயர்: ______________________

______________________

IC/FIN எண்ணின் கடைசி 4 இலக்கங்கள்:

______________________

கைபேசி எண்: ______________________

Address: ______________________

______________________

**உங்கள் விடைகளை இங்கு அனுப்புங்கள்:**

Workplace Safety and Health Council
Level 4, Ministry of Manpower Services Centre
1500 Bendemeer Road
Singapore 339946




### நேர்வு ஆய்வு 1

## தூய்மைப் பணியாளர் சரிவிலிருந்து பின்னோக்கி விழுந்து தலையில் அடிபட்டார்.



### என்ன நடந்தது?

ஒரு பள்ளித் தூய்மைப் பணியாளர் புற்சரிவில் ஏறிக்கொண்டிருந்தார், அப்போது பின்னோக்கி விழுந்தார். அவரது தலை, சரிவின் அடிப்பகுதியில் இருந்த கான்கிரீட் தரை மேல் மோதியது. அவர் முன்னதாகக் காய்ந்த இலைகளைப் பெருக்கிச் சரிவின் உச்சியில் குவித்திருந்தார். அவர் இலைக் குவியல் இருந்த உச்சிக்குச் செல்வதற்காகச் சரிவில் ஏறிக்கொண்டிருந்தபோது விபத்து நடந்தது. தூய்மைப் பணியாளர் இரு நாட்களுக்குப் பின்பு காயங்களுக்கு பலியானார்.

### அது ஏற்படக் காரணம் என்ன?

- தூய்மைப் பணியாளர் புற்சரிவில் ஏறிக்கொண்டிருந்தபோது தடுமாற்றம் அடைந்தார்
- அவரது பாதுகாப்பை உறுதிப்படுத்தப் போதுமான மேற்பார்வை அளிக்கப்படவில்லை

### அதைத் தடுக்க என்ன செய்திருக்க முடியும்?

- பணிப் பகுதிக்குச் செல்ல ஒரு பாதுகாப்பான அணுகல் வழிமுறையைப் பயன்படுத்துதல்
- வீழ்ச்சி வாய்ப்பு இடரைக் குறைக்கப் பாதுகாப்பான பணிச் செயல்முறைகளைப் பின்பற்றுதல்
- உங்கள் சுற்றுப்புறங்களைப் பற்றி விழிப்புடன் இருத்தல், பணி இடர்கள் (எ.கா., வழுக்குதல், தடுக்குதல் மற்றும் விழுதல் இடர்கள்) குறித்து கவனத்துடன் இருத்தல்

### நேர்வு ஆய்வு 2

## தூய்மைப் பணியாளர் மழையில் சாய்வுப் பரப்பில் சறுக்கி விழுந்தார்



### என்ன நடந்தது?

மழையில் ஒரு தூய்மைப் பணியாளர் ஒரு சாய்தளத்தில் இறங்கிக்கொண்டிருந்தார். அப்போது அவருக்கு வழுக்கி, பதிகல் இடப்பட்ட தரையில் அவர் தலை மோதியது. இந்த வீழ்ச்சியின் விளைவாக அவரது தலையின் பின்பக்கத்தில் ஒரு பெரிய வெட்டுக் காயம் ஏற்பட்டது. தூய்மைப் பணியாளர் இறுதியில் கோமா ஏற்பட்டு மரணமடைந்தார். அந்தக் கூடாரமற்ற சாய்தளம் ஒரு கூட்டுரிமை வீட்டில் இருந்த நீச்சல் குளங்களுக்கு அருகே இருந்தது.

### அது ஏற்படக் காரணம் என்ன?

- தூய்மைப் பணியாளர் அணிந்திருந்த செருப்புகளில் உறுதியான பிடிமானம் இல்லை
- சாய்தளத்தின் பரப்பு ஈரமாகவும் வழுக்குவதாகவும் இருந்தது

### அதைத் தடுக்க என்ன செய்திருக்க முடியும்?

- எல்லா நேரமும் விழிப்புடன் இருத்தல், எச்சரிக்கும் சுவர் வாசகங்கள் உள்ளனவா என்று பார்த்தல்
- வழுக்குவதையும் விழுவதையும் தடுக்க எப்போதுமே ரப்பர் அடிப்புறம் உள்ள காலணிகளை அல்லது ரப்பர் பூட்ஸை அணியுங்கள்



## பணிக்காலக் காய இழப்பீட்டுச் சட்டத்தில் (WORK INJURY COMPENSATION ACT, WICA) செய்யப்பட்டுள்ள முக்கிய மாற்றங்கள்

### பணியாளர்களுக்கு அதிகரித்த நிச்சயத்தன்மை, மேலும் பாதுகாப்பான நிறுவனங்களுக்கு வெகுமதி

1 முன்பு — நீங்கள் வாங்கிய WIC கொள்கை WICA-ஐப் பின்பற்றுகிறதா என்று உங்களுக்கு நிச்சயமாகத் தெரியவில்லை

**பின்பு** அரசாங்கத்தின் ஒப்புதல் பெற்ற ஒதுக்கப்பட்ட WIC காப்பீட்டு நிறுவனங்கள் மட்டுமே WIC கொள்கைகளை அளிக்க அனுமதிக்கப்படும்

2 முன்பு — கொள்கை விலக்கங்களின் காரணமாக உங்களால் உங்கள் WIC காப்பீட்டுக் கொள்கைகளிலிருந்து மீளளிப்பு பெற இயலவில்லை

**பின்பு** நியாயமற்ற விலக்கங்களைத் தடுக்கக் காப்பீட்டு விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் மையத் தொகுதி ஒன்றை MOM வரையறுக்கும்

3 முன்பு — உங்களுக்கு நல்ல பாதுகாப்பு வரலாறு உள்ளது, ஆனால் குறைந்த தவணைத் தொகைகளைச் செலுத்துவதில்லை

**பின்பு** நல்ல பாதுகாப்பு வரலாற்றைக் கொண்ட நிறுவனங்களுக்குக் குறைந்த தவணைத் தொகை

4 முன்பு — தகவல்கள் பிழையாக, பொய்யாக அல்லது தவறாக இருப்பதால், அளிக்கப்படும் மொத்தத் தொகை இழப்பீட்டையும் மருத்துவச் செலவு இழப்பீடுகளையும் உங்களால் மீட்டெடுக்க முடியவில்லை

**பின்பு** அளிக்கப்படும் முழு இழப்பீட்டையும் பெற நீங்கள் இப்போது மீட்க முயலலாம்

### ஊழியர்களுக்கு மேம்பட்ட பாதுகாப்பு

1 முன்பு — நீங்கள் தொழிற்சாலை அல்லாத ஓர் அமைவில் வேலை செய்யும் ஒரு உடல் உழைப்பல்லாத பணியாளராக இருந்தால், அல்லது மாதம் $1,600-க்கு மேல் ஈட்டுகிறீர்கள் என்றால், நீங்கள் பணிபுரியும் நிறுவனம் உங்களுக்கு WIC காப்பீட்டை வாங்காமல் இருந்திருக்கக்கூடும்

**பின்பு** மாதம் $2,600 வரை ஈட்டும் உடல் உழைப்பல்லாத பணியாளர் எல்லோருக்கும் WIC காப்பீடு இருக்க வேண்டும்

2 முன்பு — மரணத்திற்கும் ($204,000) மொத்த நிரந்தரத் திறனிழப்புக்கும் (PI) ($262,000) அதிகபட்ச இழப்பீடு

**பின்பு** அதிகபட்ச இழப்பீடு உயர்த்தப்பட்டது: மரணம் ($225,000); மொத்த PI ($289,000)[1]

[1] 1 ஜனவரி 2020 அன்று அல்லது அதன் பின்பு நிகழும் விபத்துகளுக்குப் பொருந்தும்

3 முன்பு — பணி விபத்துக்குப் பின்பு உங்களுக்கு எளிய கடமைகள் அளிக்கப்பட்டால், மருத்துவ விடுப்பு ஊதியங்கள் எவற்றையும் கோர முடியாது

**பின்பு** நீங்கள் எளிய பணியில் இருக்கும்போது ஈட்டும் ஊதியத்திற்கும் உங்கள் சராசரி மாதாந்தர ஈட்டலுக்கும் (Average Monthly Earnings, AME) இடையிலான வேறுபாட்டுத் தொகை இழப்பீடு செய்யப்படும்[2]

[2] முதல் 14 நாட்களுக்கு முழு AME; அதன் பின்பு விபத்திலிருந்து 1 ஆண்டுக் காலம் வரை மூன்றில் இரு பங்கு AME

4 முன்பு — உங்கள் பாதிப்பை இன்னொரு மருத்துவர் மதிப்பாய்வு செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், நீங்கள் வேலைசெய்யும் நிறுவனத்தின் ஒப்புதல் தேவை

**பின்பு** சிகிச்சையளிக்கும் மருத்துவர் போதுமான கவனிப்பை அல்லது மதிப்பாய்வை வழங்கவில்லை என்று நீங்கள் நம்பக் காரணங்கள் இருந்தால், வேறொரு மருத்துவர் உங்களை மதிப்பாய்வு செய்ய நீங்கள் MOM-இடம் விண்ணப்பிக்கலாம்

### இன்னும் விரைவான, எளிமையான கோரல் நிகழ்முறைகள் எல்லோருக்கும் பலனளிக்கின்றன

1 முன்பு — நிரந்தரத் திறனிழப்புக்கான கோரல் மதிப்பாய்வு செய்யப்படுவதற்கு முன்பு பணியாளர் பாதிப்பு முழுமையாக நிரூபிக்கப்படும் வரை காத்திருக்க வேண்டும்

**பின்பு** மருத்துவர்கள் கோரல் தீர்வை விரைவுபடுத்துவதற்கு நடப்புத் திறனிழப்பு மதிப்பாய்வை வழங்க முடியும்

2 முன்பு — மரணம் அல்லது தீவிர பாதிப்பு ஏற்பட்டால்கூடக் கோருநர் இழப்பீடு பெறுவதற்கு ஒரு கோரலைச் சமர்ப்பிக்க வேண்டும்

**பின்பு** தீவிர பாதிப்புகளுக்கு அல்லது மரணத்திற்கு ஒரு கோரலைப் பதிவுசெய்யத் தேவையில்லை. ஒரு விபத்து அறிக்கை தயாரிக்கப்பட்டதும் நிகழ்முறைப்படுத்துதல் தொடங்கும்

3 முன்பு — சில வகைக் கோரல்களை MOM நிகழ்முறைப்படுத்துகிறது, பிறவற்றை WIC காப்பீட்டு நிறுவனங்கள் கையாள்கின்றன

**பின்பு** WIC காப்பீட்டு நிறுவனங்கள் காப்பீடு செய்யப்பட்ட எல்லா கோரல்களையும் நிகழ்முறைப்படுத்தும். காப்பீட்டு நிறுவனம் கோரலை எப்படி நிகழ்முறைப்படுத்தியது என்பது குறித்துச் சர்ச்சை இருந்தால், MOM மீள்பார்வையிட்டு முடிவுசெய்யும்

4 முன்பு — தரப்புகளால் AME-ஐ நிரூபிக்க சம்பளச் சீட்டுகளை வழங்க முடியவில்லை என்றால், வழக்கு தாமதமாகும்

**பின்பு** தொழிற்துறை சம்பளத் தரவுகளைப் பயன்படுத்திப் பணியாளருக்கு இழப்பீடு அளிப்போம். சம்பளச் சீட்டுகளை வழங்கத் தவறியதற்காக MOM வேலையளிப்பு நிறுவனத்தைத் தனியாகக் கண்டிக்கும்

⚠ ஒன்றாகப் பணிபுரிந்து பணியிடத்தைப் பாதுகாப்பானதாக, ஆரோக்கியமானதாக ஆக்குவோம்!

மேலும் தகவல்களுக்கு தயவுசெய்து www.mom.gov.sg-க்கு வருகை தாருங்கள்

## நீங்கள் ஒரு பணியிட விபத்துக்கு உள்ளாகிப் பிழைத்திருக்கிறீர்களா?

உங்கள் அனுபவத்தை எங்கள் வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள். என்ன நடந்தது, உங்களுக்கு எப்படி இருந்தது, விபத்து எப்படித் தவிர்க்கப்பட்டிருக்க முடியும் என்பவற்றை எங்களுக்குச் சொல்லுங்கள். உங்கள் அனுபவம் மதிப்பு வாய்ந்ததாக இருக்கும். ஏனென்றால் நாங்கள் எல்லோருமே உங்கள் அனுபவத்திலிருந்து பாடம் கற்கலாம், எங்கள் பணியிடங்களில் எதைக் கவனிக்க வேண்டும் என்று தெரிந்துகொள்ளலாம்.

ஒரு வெற்றிக் கடிதம் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பிரசுரிக்கப்படும். வெல்லும் கடிதத்தை எழுதியவருக்கு ஒரு $150 பற்றுச்சீட்டு வழங்கப்படும்.

கடிதத்தில் உங்கள் முழுப் பெயர், நிறுவனத்தின் பெயர், முகவரி, தொடர்பு எண், பணி அனுமதி எண் ஆகியவற்றை மறக்காமல் எழுதுங்கள்.

உங்கள் கடிதத்தை இங்கு அனுப்புங்கள்:



The Editor, *iWSH*
Workplace Safety and Health Council
Level 4, Ministry of Manpower Services Centre
1500 Bendemeer Road
Singapore 339946

## *iWSH*-ஐ நாங்கள் எப்படி மேம்படுத்தலாம் என்பது பற்றி உங்களிடம் யோசனைகள் உள்ளனவா?

செய்திமடலில் உங்களுக்கு மிகவும் பிடித்தது என்ன என்றும் அதை நாங்கள் எப்படி இன்னும் மேம்படுத்தலாம் என்றும் எங்களுக்குச் சொல்லுங்கள். உங்கள் கடிதத்தை இங்கு அனுப்புங்கள்:

The Editor, *iWSH*
Workplace Safety and Health Council
Level 4, Ministry of
Manpower Services Centre
1500 Bendemeer Road
Singapore 339946

The Workplace Safety and Health (WSH) Council was established on 1 April 2008 to raise WSH standards in Singapore. The Council comprises 18 leaders from the major industry sectors, the Government, unions and professionals from the legal, insurance and academic fields.

**Publisher**
Workplace Safety and Health Council

**Address**
Level 4, Ministry of
Manpower Services Centre
1500 Bendemeer Road
Singapore 339946

No part of this publication may be reproduced or transmitted in any form or by any means without the prior written permission of the publisher.

To subscribe to the *iWSH* newsletter, you can email to contact@wshc.sg or visit our website at www.wshc.sg/subscription